# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/47 - 2022 දෙසැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2022.12.16

*2310/47 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல ஆகிய நான், குறித்த சபைக்கு, பிங்கிரிய, உடுபத்தாவ, பன்னல, மாகந்துர, குளியாப்பிட்டிய ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின், பெத்திகொடகெதர கன மீற்றர் 1,500 ஐ உடைய நீர் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

*கலாநிதி* **கெஹெலிய ரம்புக்வெல,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர் இல.: DVP/ *02/03/*KG/*526*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2022, திசெம்பர் 08.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், உடுபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 1508, வல்பிடகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், கும்புருகொட கிராமத்திலமைந்த, நில அளவை அத்தியட்சகரினால் அளந்து தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபட இலக்கம் 298, பத்திரிகை இலக்கம் 14, துணை இலக்கம் 14 இல் காணித்துண்டு இலக்கம் 114 இனால் குறிப்பிடப்படும் "கந்தெட்டியவத்த" எனும் காணியில் முழு அளவில் சுமார் 49.4 பேர்ச் அளவிலான கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

*காணியின் எல்லைகள்:*

*வடக்கு : பிரதேச சபை வீதி;*
*கிழக்கு : பிரதேச சபை வீதி;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கம் 115 மற்றும் 116;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 113.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

*01. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு,*
*இலக்கம் 475,*
*கடுவெல வீதி,*
*கனேஹேன,*
*பத்தரமுல்லை.*

EOG *12-0181*